**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 12 ம் நாள்
**இ.ம.எண். 2/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 58/2022**

விஜயலெட்சுமி ........மனுதாரர்/வாதி

//எதிர்//

1. B. கண்ணன் .......எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

2. K. குணசீலன்
S/O குஞ்சு ....... 2–ம் எதிர்மனுதாரர்/ புதிய தரப்பினர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சங்கரன், அவர்கள் ஆஜராகியும், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரரால் இம்மனுவானது மனுவில் விவரிக்கப்பட்டுள்ள புதிய தரப்பினரை 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி ஆவார். தனக்கு மனு விவரமும் வழக்கு விவரமும் நன்கு தெரியும் என்றும், தாவா வழக்கு சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தான் தாக்கல் செய்துள்ள பிராதை இந்த அபிடவிட்டின் ஒரு பாகமாக கருதும்படியும், மேற்படி நம்பரில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி ஆஜராகி கட்சியாடி வருவதாகவும், இந்த நிலையில் மேற்படி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி கண்ணன் மேற்படி வழக்கில் நாளது வரை எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் வீண்

காலதாமதம் செய்வதுடன் மேற்படி சொத்தின் முன் உரிமையாளரான வீராசாமி குமாரர் குஞ்சுவின் மகனும் 2ம் எதிர்மனுதாரருமான K. குணசீலன் என்பவரை தூண்டிவிட்டு தாவா சொத்தை தான் அனுபவிப்பதை இடையூறு செய்ய முற்படுத்துவதாகவும், இது சம்பந்தமான தான் பூம்புகார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் மேற்படி பிரச்சனை சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றம் சென்று பரிகாரம் காணும்படி கூறுவதாகவும், எனவே, 2ம் எதிர்மனுதாரர், முதல் எதிர்மனுதாரர் வாதியுடன் சேர்ந்து ஏதோ உள்நோக்கத்துடன் தொல்லை கொடுப்பதால் மேற்படி வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் அவசியமான தரப்பினர் என்றும், எனவே, மேற்படி வழக்கிலும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்ற மனுக்களிலும் 2ம் எதிர்மனுதாரரை, தரப்பினராகவும்/2ம் பிரதிவாதியாகவும்/2ம் எதிர்மனுதாரராகவும் சேர்த்து மேற்படி வழக்கையும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்ற மனுக்களையும் மேல் நடத்த உத்தரவு விட வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளதாகவும், இல்லையென்றால் தனக்கு ஏராள கஷ்டமும் நஷ்டமும் சம்பவிக்கும் என்றும், எனவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி நம்பரில் மேற்படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக மனுதாரர்/வாதி இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ளவாறு 2ம் எதிர்மனுதாரர்/புதிய தரப்பினரை மேற்படி வழக்கிலும் மற்ற மனுக்களிலும் தரப்பினராக 2ம் எதிர்மனுதாரர் /2ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனை குறிப்பாணை:**

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கது அல்ல. மனுதாரர் அபிடவிட் மற்றும் மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையல்ல என்றும், அவைகளை இந்த 1ம் எதிர்மனுதாரர் திட்டவட்டமாக மறுப்பதாகவும், அதனை மனுதாரர்/வாதி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளதாகவும், அபிடவிட் பத்தி 3–ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் உள்ளார் என சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், முற்றிலும் பொய்யானது என்றும், இந்த எதிர்மனுதாரர் 2 ஆவணங்களுடன் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை மனுதாரர் அனுபவிப்பதை இடையூறு செய்கிறார் என சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், தாவா சொத்து மனுதாரர் வசமே இல்லாத நிலையில் அவ்வாறு ஒரு நிகழ்வு ஏற்படக்கூடியதில்லை என்றும், ஏற்படவும் இல்லை என்றும், எனவே

பொய்யான ஓர் அபிடவிட்டினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த அடிப்படையில் இம்மனுவும், அசல் வழக்கும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், 2ம் எதிர்மனுதாரர் பற்றி வழக்குரையில் எந்த விபரமும் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்யும் போது 2ம் எதிர்மனுதாரர் பேரில் எந்த வழக்கு மூலமும் இல்லாத நிலையில் அவரை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்க கூடியதில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து (Cause of Action) உள்ளதாகவும் தெரிவிக்கவில்லை என்றும், வழக்குமூலம் இல்லாத நிலையில் எந்த ஒரு நபரையும் வழக்காடியாக சேர்க்க சட்டத்தில் வழிவகை இல்லை என்றும், அசல் வழக்கினை மேல் நடத்தாமல் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவினை கூடுதல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தின் முன் உரிமையாளரான வீராசாமி குமாரர் குஞ்சுவின் மகனும் 2ம் எதிர்மனுதாரரான குணசீலன் என்பவரை தூண்டிவிட்டு தாவா சொத்தை மனுதாரர் அனுபவிப்பதை இடையூறு செய்ய முற்படுகிறார் என்றும், இது சம்பந்தமாக மனுதாரர் பூம்புகார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், மேற்படி பிரச்சனை சிவில் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் காணும் படி கூறினார்கள் என்றும் 2–ம் எதிர்மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து உள்நோக்கத்துடன் வாதிக்கு தொல்லை கொடுப்பதால் மேற்படி வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் என்றும், எனவே,அவரை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை மனுதாரர் அனுபவிப்பது இடையூறு செய்கிறார் என சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், தாவா சொத்து மனுதாரர் வசமே இல்லாத நிலையில் அவ்வாறு ஒரு நிகழ்வு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும், வழக்கு தாக்கல் செய்யும் போது 2ம் எதிர்மனுதாரர் பேரில் எந்த வழக்கு மூலமும் இல்லாத நிலையில் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது இல்லை என்றும், அசல் வழக்கினை மேல் நடத்தாமல் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிரான நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வீராசாமி மகன் குஞ்சு என்பவருக்கும் மனுதாரருக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என கூறப்பட்டுள்ளது. தற்போது குஞ்சுவின் மகன் குணசீலன் என்பவர் 1ம் எதிர்மனுதாரருடன் கூட்டு சேர்ந்து கொண்டு இடையூறு செய்து வருவதாகவும், அதனால் மேற்படி குணசீலன் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி குணசீலன் என்பவர் எந்த தேதியில் தாவா சொத்தில் இடையூறு செய்தார் என்பதையும் எந்த விதத்தில் இடையூறு செய்தார் என்பதையும், மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டு கூற வேண்டும். மேலும், குணசீலன் என்பவர் தாவா சொத்தில் இடையூறு செய்தது சம்பந்தமாக பூம்புகார் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் புகார் கொடுத்ததை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர் தரப்பில் புகாரையோ அல்லது மனு ரசீதையோ இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்யலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**9.முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 26.06.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.